
# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **42**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**





# இழந்தவற்றுக்கு இலக்கு வைத்த தீர்மானங்கள்!

*1916*-இல் வெளிவந்த பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை, அதன்பின்னர் உருவான தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து, பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றம், வகுப்புரிமை போன்ற இலக்குகளை முன்வைத்து, சென்னை மாகாணம் முழுவதும் பார்ப்பனரல்லாதார் இயக்கங்களின் பல்வேறு மாநாடுகள் நடைபெற்றன. அதே நேரத்தில், ஆங்கிலேய அரசு சார்பில் மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை ஒட்டிய முன்தயாரிப்பு வேலைகளும் நடைபெற்றன. அதனையொட்டிய அரசியல் நிகழ்வுகளில் ஒன்றாகவும் பார்ப்பனரல்லாதார் இயக்க மாநாடுகள் அமைந்தன.

## கோயம்புத்தூர் பார்ப்பனரல்லாதார் மாநாடு

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட முதல் மாநாடாக 19.08.1917, 20.08.1917 ஆகிய இரண்டு நாட்கள் கோயம்புத்தூரில் நடைபெற்ற 'பார்ப்பனரல்லாதார் மாநாடு' விளங்குகிறது. **டி.எம்.நாயர், பிட்டி தியாகராயர்** உள்ளிட்டோர் கலந்துகொண்ட இந்த மாநாட்டிற்கு **பனகல் அரசர் ராமராய நிங்கார்** தலைமையேற்றார். வரவேற்புக் குழுத் தலைவரான ஊத்துக்குளி ஜமீன்தார் எம்.ஆர்.காளிங்கராயரின் வரவேற்புரை இம்மாநாட்டின் நோக்கங்களைத் தெளிவாக எடுத்துரைத்தது. காளிங்கராயரின் வரவேற்புரையை, எம்.ஜி.ஆரோக்கியசாமி வாசித்தார்.

## பார்ப்பனரல்லாதார் கடமை

அவ்வுரையில், "இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அழைக்கப்படாத சமூகத்தின் உறுப்பினர்கள் நீண்ட காலமாகவே நமது நாட்டின் பெயரால் பேசுவதாகக் கூறிக்கொண்டு, அரசியல் செயல்திட்டத்தால் கிடைக்கும் அனைத்துப் பயன்களையும் தாங்களே பெற்றுக்கொண்டு வந்துள்ளனர். நாம் இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், வெகுகாலமாகவே அசட்டையாக இருந்து வந்திருக்கிறோம். மேற்கத்தியக் கல்வியை எந்த அளவுக்கு நாம் பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டுமோ, அந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதன் விளைவாக, கல்விக் களத்தில் யார் முன்னதாக நுழைந்தார்களோ, அவர்களே அனைத்துக் களங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே, இதுவரை இழந்தவற்றை நாம் சரிசெய்வதுடன், நம்மை விட முன்னேறியுள்ள மற்றவர்களின் நிலையையும் எட்டி, அதனையும் கடக்கும் அளவுக்கு நாம் கடுமையாக உழைக்கவேண்டும். இப்போது அதுவே நம் கடமையாகும்." என்று பார்ப்பனரல்லாதார் சென்று சேர வேண்டிய இலக்கு மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

பனகல் அரசர் தனது தலைமையுரையில் பார்ப்பனர்கள் பெற்றிருக்கும் நிலை, ஆங்கிலேய ஆட்சியின் நன்மை தீமைகள், பார்ப்பனரல்லாதார் பெற வேண்டிய உணர்ச்சி, அதற்காகப் பார்ப்பனரல்லாதார் இயக்கம் செய்யவேண்டிய வேலைகள் ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துரைத்தார்.

"பார்ப்பனரல்லாத சமூகங்கள் எப்போதுமே ஒரு பொதுவான சமூக ஒழுங்குமுறை கொண்ட அமைப்பின் கீழ் இருந்ததில்லை. அவர்களிடையே எந்தவித ரகசிய அரசியல் நோக்கம் கொண்ட உறவுகளும் இருந்ததில்லை.

தனிப்பட்டவர்களும், சமூகப் பிரிவுகளும் எந்தவித நோக்கமும் இன்றி சமூக நீரோட்டத்தில் மிதந்து சென்றனர். அதன் விளைவால், அவர்களது நிலைக்கும் நலன்களுக்கும் பேரழிவு நேர்ந்தது. இவ்வாறு நடைபெற்ற நிகழ்வு ஒன்றும் வியப்பளிக்கக் கூடியதல்ல. எவருடனும் ஒன்றுசேராத வழிவழி வந்த புரோகிதக் கூட்டத்தின் இரும்புப் பிடியின் கீழ், மூடநம்பிக்கைப் பழக்கவழக்கங்களில் போற்றி வளர்க்கப்பட்ட பார்ப்பனரல்லாத சமூகங்களில் பெரும்பாலோருக்கு வேறுவழி எதுவும் தெரிந்திருக்கவில்லை. கல்வியறிவு என்னும் நீருற்றை நெருங்கும் உரிமையோ, வாய்ப்போ அவர்களுக்கு இருக்கவில்லை. ஒவ்வொரு துறை பற்றிய கல்வி அறிவையும் வேறு எவரும் பெற்றுவிடாதபடி பார்ப்பனர்கள் தங்கள் கைகளிலேயே வைத்திருந்தனர்" என்று மிகத் தெளிவாக இந்திய சமூகத்தில் பார்ப்பனர்கள் பெற்றிருந்த முற்றுரிமைகளையும், பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைத்துவிடாமல், தடுக்கப்பட்டிருந்த உரிமைகளையும் வாய்ப்புகளையும் பனகல் அரசர் சுட்டிக்காட்டினார்.

இப்படிப்பட்ட சமத்துவமற்ற இந்தியச் சமூகத்தில் அனைத்துச் சமூக மக்களும் முன்னேற்றமடைய வேண்டிய தேவையையும், அதற்காகப் பார்ப்பனரல்லாதார் பெற வேண்டிய உணர்ச்சிகளையும் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

"நமது நாட்டில் உள்ள அரசியல்வாதிகள், அவர்களது கட்சிகளில் நிலவும் பாரம்பரிய மூடநம்பிக்கைகள், தள்ளுமுள்ளுகளுக்கிடையே இத்தகைய ஒருங்கிணைந்த முன்னேற்றம் பெறுவது என்பதனை அடையாளம் காணவே இல்லை.

ஜாதிகள் மலிந்த இந்தியா போன்றதொரு நாட்டில், தூய்மையான ஜனநாயக மரபுகள் அரிதாகவே இடம் பெற்றிருப்பதில் வியப்பேதுமில்லை. அந்தக் கருத்து தோன்ற வேண்டுமானால், நாட்டின் அனைத்துச் சமூகங்களைச் சேர்ந்த அனைத்து மக்களும், அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் குழுக்களுக்கிடையேயான செயற்கைத் தடைகள் எதுவுமின்றி, சமமான உரிமைகளும் வாய்ப்புகளும் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் வேரூன்ற வேண்டும்.

> **"நமது ஆன்மாக்களைப் பாதுகாப்பது என்ற பெயரில், நமது அறிவையும், சிந்தனையையும் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நமது பழைய ஆன்மிக வழிகாட்டுதல்கள் என்னும் தளைகளில் இருந்து நாம் விடுபட வேண்டும்."**

மக்கள் மனதில் நன்கு ஊடுருவி, மக்களிடையே பரவலாகப் பரவியுள்ள இந்தக் கருத்தின் வழிகாட்டுதலில்தான் நமது இயக்கம் செயல்பட்டு வருகிறது. இந்தக் கருத்து முழுமையாகச் செயல்வடிவம் பெறவேண்டுமானால், நமது ஆன்மாக்களைப் பாதுகாப்பது என்ற பெயரில், நமது அறிவையும், சிந்தனையையும் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் நமது பழைய ஆன்மிக வழிகாட்டுதல்கள் என்னும் தளைகளில் இருந்து நாம் விடுபட வேண்டும்.

நமது புதிய இயக்கத்தைத் துவக்கியதற்கான மற்றொரு காரணம் இதுதான். இந்த மாநாடு இக்கொள்கை உணர்வுக்கு உருவம் கொடுத்துக் கொண்டிருக்கிறது."

பார்ப்பனரல்லாதார் சமூகம் முன்னேற வேண்டுமெனில், அவர்களின் மக்கள்தொகைக்கு உரிய விகிதாசாரத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்றும், அவர்களின் சமூக அந்தஸ்திற்கும் கவுரவத்திற்கும் குறைவான இடங்கள் அளிக்கப்படக் கூடாது என்றும், ஒவ்வொரு சமூகத்திற்கும் அதற்குரிய சரியான பங்கு இருக்கவேண்டும் என்றும், சரியான பங்கிற்கு அதிகமான பங்கு நிச்சயமாக இருக்கக் கூடாது என்றும் பனகல் அரசர் தனது உரையில் வலியுறுத்தினார்.

## மாநாட்டுத் தீர்மானங்கள்

மாநாட்டின் இரண்டாம் (20.08.1917) நாளில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் வகுப்புரிமை தொடர்பான தீர்மானங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெரும்பான்மையினராக விளங்குவதற்கு ஏற்ப மாகாண, மத்திய சட்டமன்றங்கள் இரண்டும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அந்த மன்றங்களில் அனைத்துச் சமூகங்களுக்கும் அவர்களின் மக்கள்தொகைக்கு ஏற்றவிகிதத்தில் பிரதிநிதித்துவம் அளித்து, அவர்களது நலன்களைப் பாதுகாக்க வேண்டும். தேர்தல் நடத்தப்படுவதற்கான பகுதிகள் இணைக்கப்படும்பொழுது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பிரதிநிதியாவது இருப்பதற்கு வகை செய்யவேண்டும்.
- நிர்வாகக் கவுன்சில் உறுப்பினர்களில் பாதி எண்ணிக்கையினர் இந்தியர்களாக இருக்கவேண்டும். பல்வேறுபட்ட சமூகங்களுக்கும் நிர்வாக கவுன்சிலில் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், உறுப்பினர்கள் நியமனம் செய்ய வேண்டும்.
- அரசின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கோ அல்லது அரசுக்கு ஆலோசனை கூறவோ, தற்போதுள்ள அல்லது எதிர்காலத்தில் உருவாக்கப்படவுள்ள அனைத்து மன்றங்கள், கழகங்களிலும் அனைத்துச் சமூகங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவது பற்றி, அக்கறை கொள்ள வேண்டும்.
- சேர்க்கை மறுக்கப்பட்ட மாணவர் விண்ணப்பங்களை வைத்துப் பார்க்கும் போது, இடைநிலை, உயர்நிலைக் கல்விக்காகத் தற்போதுள்ள வசதிகள் போதுமானவையாக இல்லை என்று இந்த மாநாடு கருதுகிறது. தகுதிபெற்ற அனைத்து மாணவர்களையும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்த்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.
- பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குக் கல்வி அளிக்கப் போதுமான ஊக்கம் அளிக்கும் செயல்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று, இந்த மாநாடு கருதுகிறது. அண்மையில், மைசூர் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பார்ப்பனரல்லாத ஏழை மாணவர்களுக்குப் படிப்புதவி அளிக்கும் திட்டத்தைப் போன்ற திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

**...குரல் ஒலிக்கும்**

## பாலினப் பாகுபாட்டைப் போக்கும் வழி!

பெண்களின் சமூகப் பொருளாதார விடுதலைக்கான ஒரே வழி 'கல்வி' என்பதால்தான், 'திராவிட மாடல் அரசு' பள்ளிக்கல்வி முதல் பட்டப்படிப்பு வரை பெண்களுக்கான திட்டங்களைப் புதிது புதிதாக வகுத்து, செயல்படுத்தி வருகிறது. அதனால், பெண்களுக்கான வேலைவாய்ப்புத் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. ஒருகாலத்தில், பெண்களுக்கான வேலைவாய்ப்பு என்றால் தையல், விவசாயம், மில் வேலைகள் போன்ற அமைப்புசாரா வேலைகள்தான் முதன்மையானதாக இருந்தன.

படித்த பெண்களின் விருப்பத் தேர்வாகக் கூட, மென்பொருள் நிறுவனங்களே முதன்மையாய் இருந்தன. ஆனால், இப்போது உற்பத்தித் துறையிலும் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதாக 'டீம்லீஸ்' நிறுவனத்தின் ஆய்வறிக்கை கூறுகிறது. குறிப்பாக 'வாகனம், மின்னணுப் பொருட்கள், பேட்டரி வாகனங்கள், செல்போன் தயாரிப்புத் துறை ஆகியவற்றில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை, வேகமாக அதிகரித்து வருகிறது' என்கிறது அந்த ஆய்வு.

இத்தொழில்களில் இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழ்வது தமிழ்நாடு. தமிழ்நாட்டுப் பெண்களே இத்துறைகளில் அதிக வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் அமைப்புசார்ந்த துறைகளில் பணிபுரியும் பெண்களில் தமிழ்நாட்டில்தான் சரிபாதி பெண்கள் உள்ளனர். ஒப்பந்தத் தொழில்களிலும் பெண்கள் அதிகம் பணிபுரியும் மாநிலமாகவும் மகாராஷ்டிரத்திற்கு அடுத்து, தமிழ்நாடுதான் உள்ளது. ஆண்களுக்கு நிகராக உற்பத்தித் துறைகளிலும் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு அதிகரிப்பது, காலப்போக்கில் பணியிட பாலினப் பேதங்களைத் தகர்க்கவும், ஊதியப் பாகுபாட்டைக் களையவும் வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## :ப்ளாஷ்பேக்



வைர.இளம்வழுதி



**தந்தை வழியில் கழகப்பணி!**

1993-ஆம் ஆண்டு கழகத்திலிருந்து பிரிந்த சிலர் மாற்று இயக்கம் கண்டபோது, அன்றைய ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம், இன்றைய தேனி மாவட்டக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினராக, என் தந்தை வடுகபட்டி வைரமுத்து அவர்களை நியமித்தார், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதைத் தொடர்ந்து, தேனி மாவட்டத்தில் கழகத்தினரைக் காத்தமையால் என் தந்தையை தலைவர் கலைஞர் பாராட்டிச் சிறப்பு செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**– வைர.இளம்வழுதி, பெரியகுளம், வடுகப்பட்டி, தேனி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


**ஜின்னா ஆதரவு!**

1941-ஆம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் லீக் 28-வது மாநாட்டிற்குத் தலைமை ஏற்பதற்காக, முகமது அலி ஜின்னா வருகை தந்திருந்தார். பெரியார் தலைமையில் சென்ற குழுவினர், மும்பையில் அவரைச் சந்தித்து, 'திராவிட நாடு' கோரிக்கையை, ஏற்கெனவே எடுத்து விளக்கியிருந்ததால், சென்னை மாநாட்டில், 'திராவிட நாடு கோரிக்கையை பிரிட்டிஷார் அங்கீகரிக்க வேண்டும்' என ஜின்னா கேட்டுக் கொண்டார். பார்ப்பனரல்லாதாருக்கு முழு ஆதரவை வழங்குவதாகவும் ஜின்னா அறிவித்தார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**693**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131